# AUXILIUM COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN


**Affiliated to Bharathidasan University, Tiruchirappalli -24**

**Managed by Salesian Sisters, Trichy**

**Regunathapuram (Po) Karambakudi (Tk) Pudukkottai (Dt) – 622302**


2018-2019 நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம்

(02.03.2019-08.03.2019)

பாரதிதாசன் பல்கலைக்கழகமும், அக்ஸீலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இணைந்து நடத்திய நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமானது ஏழு நாட்கள் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை வட்டம் கல்லாக்கோட்டை ஊராட்சியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முகாமின் முதல் நாள்: 02.03.2019 அன்று முகாம் துவக்க விழாவானது கல்லாக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் எம் கல்லூரியின் முதல்வர். முனைவர் அருட்சகோதரி செல்வராணி, அவர்கள் குத்து விளக்கேற்றி விழாவினை தொடங்கி வைத்தார். கல்லாக்கோட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தலைமை ஏற்றார். திரு. மரு. சாமியப்பா, துணை இயக்குநர் மாவட்ட தொழுநோய் ஆலோசகர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொழு நோய் பற்றிய விழிப்புணர்வு குறித்து விளக்கினார்.





இரண்டாம் நாள்: 03.03.2019 அன்று கல்லாக்கோட்டை கோயில் வளாகம் ஆரம்ப சுகாதார நிலையம் தூய்மைப்படுத்தப்பட்டது. பின்னர், திருமதி.ீபா, எம் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியை பெண் உயர்கல்வியின் அவசியம் என்ற தலைப்பில் ஒரு சிறப்பு சொற்பொழிவை மாணவர்களுக்கும், ஊர் மக்களுக்கும் எடுத்துக்கூறினார்.



மூன்றாம் நாள்: 04.03.2019 அன்று பள்ளி வாளகம் மற்றும் தெருக்கள் சுத்தப்படுத்தப்பட்டது. பின்னர், மாலை 5.00 மணியளவில் கண் பரிசோதனை சிறப்பு முகாம் உயர்திரு.டாக்டர்.ராஜ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. முகாம் பற்றி செல்வி.டெய்சி ராணி அவர்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.






நான்காம் நாள்: 05.03.2019 அன்று அங்கன் வாடி மற்றும் அங்காடி தூய்மைப்படுத்தப்பட்டது. அருட்சகோதரி.எம்.சவரியம்மாள் தலைமை

தாங்கினார்.பின்னர். ‘‘நுகர்வோர் பாதுகாப்பு’’ என்ற தலைப்பில் வழக்கறிஞர் திரு.திலீபன் ராஜா அவர்கள் விழிப்புணர்வு சிறப்புரை ஆற்றினார்.




**ஐந்தாம் நாள்:** 06.03.2019 அன்று ஆரம்ப சுகாதார நிலையத்தின் குடிநீர் தொட்டித் தூய்மைப்படுத்தப்பட்டது. திருமதி.எம்.சங்கீதா அவர்கள் தலைமை தாங்கினார். பின்னர் ‘‘பிளாஸ்டிக் ஒழிப்பு’’ என்ற தலைப்பில் ஒரு சில கருத்துக்களை தமிழத்துறை பேராசிரியை திருமதி.அறிவுக்கனி அவர்கள் சிறப்பாக எடுத்துரைத்தார். பின்னர் பசுமையை போற்றும் வகையில் எம் கல்லூரி மாணவிகளால் மரக்கன்றுகள் நடப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது.



**ஆறாம் நாள்:** 07.03.2019 அன்று கல்லாக்கோட்டை கடைவீதி தூய்மைப்படுத்தும் பணி திருமதி.பவுன்ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் மாலை 5.00 மணியளவில் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு முகாம் செல்வி.பி.கௌரி சிறப்புரையாற்ற முகாம் நடைபெற்றது.

**முகாம் நிறைவு விழா.** முகாம் நிறைவு நாளான வெள்ளிக்கிழமை 08.03.2019 அன்று காலை 8.00 மணியளவில் விழாவானது ஆரம்பிக்கப்பட்டது. விழாவிற்கு எம் கல்லூரியின் தாளாளர்.முனைவர்.அருட்சகோதரி.மரியபுஷ்பம் அவர்கள், மற்றும் முனைவர்.பீ.செல்வராணி அவர்கள் கல்லாக்கோட்டை ஊராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஏ.கீதா அவர்கள் முன்னிலை வகித்தார். மாணவிகளின் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது இறுதியில் நாட்டுநலப்பணித்திட்ட துணை ஒருங்கிணைப்பாளர் செல்வி.டெய்சி ராணி அவர்கள் நன்றியுரை வழங்க நாட்டுப்பண்ணுடன் முகாமானது இனிதே நிறைவுற்றது.


மகளிர் தின விழா


மகளிர் தின